# இருமொழி வாசிப்புப் பண்பாட்டை இல்லத்திலும் பள்ளியிலும் எவ்வாறு உருவாக்குவது?

ஒரு குழந்தையின் வளர்ப்பில் இல்லமும் நாடும் எவ்வாறு பெரும் பங்களிக்கின்றனவோ, அதைப்போன்று இருமொழி வாசிப்புப் பண்பாட்டை உருவாக்கப் பள்ளிகள், குடும்பங்கள், சமூகங்கள் ஆகிய அனைத்தும் ஒருங்கிணைந்து முயற்சிகளை மேற்கொள்வது அவசியமாகிறது.

## பள்ளியில் செய்யக்கூடியவை

மாணவர்களுக்குப் பொருத்தமான ஆங்கிலம், தாய்மொழி ஆகிய இருமொழிகளையும் உள்ளடக்கிய கூடுதல் சமநிலைத்தன்மையுடன் கூடிய வாசிப்புத்திட்டங்களை அறிமுகப்படுத்துங்கள்!

மாணவர்களின் வயதிற்கும் மொழித் தேர்ச்சிக்கும் ஏற்ப அவர்களுக்கெனப் பொருத்தமான வாசிப்புத் திட்டங்களை வடிவமைத்துத் தாருங்கள்!

குழந்தைகள் வெவ்வேறு மொழிகளில் வாசிப்பதை ஆதரிக்கும்வகையில் டேப்லட் (Tablet), கணினியில் வாசிப்புச் செயலிகளைப் பதிவிறக்கம் செய்து அவர்களுக்குத் தாருங்கள்!

பள்ளி மாணவர்களுக்குப் பொருத்தமானவையாகவும் சுவாரசியமானவையாகவும் அமையக்கூடிய பல வகைப் புத்தகங்களைப் பள்ளி நூலகத்தில் வைப்பதுடன் அவற்றை எளிதில் பெறும் வசதியையும் ஏற்படுத்தித் தாருங்கள்!



பள்ளியில் மாணவர்கள் மகிழ்ச்சிக்காக வாசிப்பதற்கு ஏதுவாகப் பள்ளி நேரத்தில் போதிய அளவு நேரத்தை வசதி செய்து தாருங்கள்!

மாணவர்கள் மகிழ்ச்சியும் இன்பமும் அடையும்வகையில் புத்தகங்களை வாசிக்க ஊக்கம் தாருங்கள்! அவர்கள் தாங்கள் தொடர்ந்து வாசிப்பதற்கு எப்போதெல்லாம் முடியுமோ அப்போதெல்லாம் வாய்ப்புகளை ஏற்படுத்தித்தாருங்கள்!

## இல்லத்தில் செய்யக்கூடியவை

தங்களது பிள்ளைகளின் தினசரி அட்டவணையில் வாசிப்பதற்கான வாசிப்பு நேரத்தையும் சேர்த்திடுங்கள்

குடும்ப உறுப்பினர்களிடையே அவர்கள் வாசித்தவற்றைப் பற்றி மகிழ்ச்சியாகப் பகிர்ந்துகொள்ளும் வகையில் கலந்துரையாடுங்கள்!

குழந்தைகளுடன் உரையாடி அவர்களின் விருப்பங்களைத் தெரிந்து கொள்ளுங்கள்! அவர்களது விருப்பங்களுக்கேற்ற புத்தகங்களைத் தேடிக் கண்டுபிடித்து, அவர்களுக்கு ஆதரவு தாருங்கள்! அவர்களது வாசிப்பு விருப்பங்களை இன்னும் அதிகமாக்கவும் விரிவுபடுத்தவும் வழி செய்திடுங்கள்!

(தங்களது) இல்லத்தில் இரண்டு மொழிகளில் நூல்களை வாசிப்பதற்கு ஏற்ற ஒரு வசதியான, மனத்திற்கு ஏற்ற ஓர் இடத்தை வடிவமைத்திடுங்கள் அல்லது உருவாக்கிடுங்கள்.



பாலர் பள்ளியில் பயிலும் தங்கள் பிள்ளைகளுக்கு அச்சிறு வயதிலிருந்தே புத்தகங்களை வாசித்துக் காட்டி அவர்களை வாசிப்பில் ஈடுபடுத்துங்கள்!



பிள்ளைகளைப் பார்த்துக்கொள்வதற்கு (இயந்திர நிலையிலுள்ள) புத்தகச்செயலிகளைப் பயன்படுத்தாதீர்கள்! மாறாகத் தங்கள் குழந்தைகளுடன் தாங்களும் சேர்ந்து அதே செயலிகளைப் பயன்படுத்தி, உயிரோட்டத்துடன் வாசியுங்கள்!

இப்பரிந்துரைகள் 2020இல் நடத்தப்பட்ட ஓர் ஆய்விலிருந்து எடுக்கப்பட்டவை. இந்த ஆய்வு சிங்கப்பூரில் இருமொழி பேசும் குழந்தைகளின் வாசிப்புப் பழக்கங்களை ஆங்கிலத்திலும் அவர்களின் தாய் மொழிகளிலும் ஆராயும்வகையில் நடத்தப்பட்டது. மேலும் விவரங்களுக்கு, தயவுசெய்து முழு அறிக்கையைக் காணுங்கள்:

தாங்கள் முதன்மைப் புலனாய்வாளரையும் தொடர்பு கொள்ளலாம்.
baoqi.sun@nie.edu.sg

NIE National Institute of Education Singapore | An Institute of Nanyang Technological University Singapore

© Leisure Reading in Two Languages: Reading Habits and Preferences of Bilingual Children in Singapore, Office of Education Research, National Institute of Education, Nanyang Technological University, Singapore 2021